ராணி
காமிக்ஸ்
சூப்பர் கார்
ரூ. 2

Fans made not for sale

ராணி காமிக்ஸ் 108
(மாதம் இருமுறை இதழ்)

டிசம்பர் 16-31
1988



கார் மியூசியம்
இதுதானே திருட்டுப் போன பம்பர்? இதைக் கொடுத்தால் இலட்சம் பவுன் கிடைக்கும் அல்லவா?
CAR MUSEUM
அவர்கள் நம்மை முந்திவிட்டார்கள் போலிருக்கிறதே!

சர்ச்சில் இருக்கிறாரா?
நான்தான் சர்ச்சில். நீங்கள் யார்?
யாரோ மெக்கானிக் என்று நினைத்தோமே!
மெக்கானிக் போல இருந்த அவர்தான் சர்ச்சில். கார் மியூசியத்தின் அதிபர்.

இது போலி! அசல் அல்ல!
என்னை ஏமாற்ற முடியாது! பித்தலாட்டகாரர்களே போங்கள்!!
யாரோ அவரை ஏமாற்றுகிறார்கள்.
உண்மையான பம்பரை நாங்கள் கண்டுபிடித்துக் கொடுக்கிறோம்.
இந்தக் கார் உங்களுடையதா? வித்தியாசமாக இருக்கிறதே பார்க்கலாமா?
நிறைய மாறுதல் செய்து இருக்கிறீர்களே! இது என்ன?
அதைத் தொடாதீர்கள்! அதைப் பின்னே தள்ளினால், கார் நூறு ஆண்டு பின்னே போய்விடும்!

சூப்பர் கார் பற்றி பேராசிரியர் புரூ விளக்கிச்சொன்னார்.
இது ஓர் அதிசயக் கார். இதில் ஏறி அமர்ந்தால், தியோ 1925-ம் ஆண்டுக்குப் போய்விடுவார். சிகாகோ நகரம் செல்லுவார். நீங்கள் தேடும் பம்பரைக் கண்டு பிடித்து விடுவார்.
1925-ல் சிகாகோவில் இருந்த அந்தோணி என்ற பெரிய கொள்ளைக் காரனின் கார் இது. இதன் பம்பரைத்தான் காணவில்லை.
கவலைப் படாதீர்கள் நான் கண்டுபிடித்து தருகிறேன்.
தியோ காருக்குள் ஏறி அமர்ந்தார்.
அந்தோணி பல இலட்சம் டாலர்களைக் கொள்ளை யடித்து எங்கோ புதைத்து வைத்திருக்கிறான். அது விவரத்தை அந்த பம்பரில் எழுதிவைத்திருக்கிறான்.
நான் 1925-ம் ஆண்டுக்கே போகிறேன். அந்தோணியை சந்தித்து பம்பர் பற்றிக் கேட்கிறேன்.

1925-ம் ஆண்டை நோக்கி சூப்பர் கார் விரைந்து சென்றது.

சிறிது நேரத்தில் கார், சிகாகோ நகருக்கு வந்து சேர்ந்தது.
சிகாகோ நகருக்கு வந்துவிட்டேன். அந்தோணியின் கார்தானே அது!
அது யார்? புதுக்கார் போலத் தெரிகிறது!

அப்பொழுது அந்தோணி வந்தான்.
டேய், அந்தோணி வருகிறான்!
நல்லவேளை நான் தேடிவந்த பம்பரை சுலபமாகக் கண்டு பிடித்து விட்டேன்.
அந்தோணி காரில் ஏறப் போனான். அதேநேரம் மற்றொரு கொள்ளைக் காரனான ராபின்சன் வந்தான்.
டேய்! அவன்தான் அந்தோணி சுட்டுத் தள்ளுங்கள்.
ராபின்சன் ஆட்கள்தான். உம் விடாதீர்கள் சுடுங்கள்!
டுமீல்... டுமீல்...
அந்தோணியும், ராபின்சனும் விரோதிகள். இருவரும் நடுரோட்டில் சண்டை போட்டுக் கொண்டார்கள்.
ஆபத்து! என் தலை போய்விடும் போலிருக்கிறது!

ராபின்சன் கூட்டத்தாரின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் அந்தோ ணியின் ஆட்கள் திணறினார்கள். குண்டுகளில் இருந்து தப்பிக்க தியோ அந்தோணியின் ஆட்களுடன் சேர்ந்து நின்றார்.
அவர்கள் யார்? ஏன் இவர்களை தாக்குகிறார்கள்? எனக்கு ஒன்றுமே புரிய வில்லையே!
தாமஸ்! சீக்கிரம் வண்டியை எடு. எல்லாரும் ஏறுங்கள்.
அந்தோணி பதட்டத்தில், தியோவை தாமஸ் என்று நினைத்து காரை எடுக்கச் சொல்லி அவசரப்படுத்தினான்.
நான் தாமஸ் இல்லை, தியோ!
அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. முதலில் காரை விரைவாக ஓட்டு.
இந்தமுறை அந்தோணியை தப்பவிடக் கூடாது.
ஏதாவது ஒரு திருப்பத்தில் போ! அவர்கள் நம்மை பின்தொடர்ந்து வருகிறார்கள்.

ஒரு திருப்பத்தில் திரும்பிய கார், அதே வேகத்தில் ஒரு கடைக்குள் புகுந்தது.
என்ன இது?
SWEET REPOSE
MORTICIAN'S PARLOUR

ராபின்சன் ஆட்களிடம் இருந்து தப்பிக்க இதைத்தவிர வேறு வழியில்லை கண்டிப்பாக அவர்கள் நம்மைப் பார்த்திருக்க முடியாது.
OUR CUSTOMERS NEVER COMPLAIN!
— PATRONISED BY ALL THE LEADING MOBSTERS!

கார் கடையை விட்டு வெளியேறி சாலையில் சிறிப் பாய்ந்தது.
நான் சொல்வதைக் கேளுங்கள். என் பெயர் தியோ. நான் இங்கிலாந்தில் இருந்து மிஸ்டர் அந்தோணியைப் பார்ப்பதற்காக இங்கே வந்திருக்கிறேன்.
என்ன, அந்தோணியைப் பார்க்க வந்தாயா? நான்தான் அந்தோணி? என்னை எதற்காகப் பார்க்க வேண்டும்.

இருவரும் நண்பர்கள் ஆனார்கள். ஓர் இடத்தில் கார் நின்றது.
இதுதான் என் இடம். உள்ளே வா, என் ஆட்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.
AL SPADONI'S POOLROOM
நான் நினைத்தது போலவே எல்லாம் நடக்கிறது. இவன் காரில்தான் பம்பர் இருக்கிறது.

ராபின்சனை நண்பன் ஆக்கிக்கொள்ள தியோவிடம் அந்தோணி யோசனை கேட்டான்.
எனக்கும், ராபின்சன் கூட்டத்துக்கும் உள்ள பகை உணர்ச்சி மறைந்து நண்பர் களாக வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?
ராபின்சன் கூட்டத்தாரை அழைத்து ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

நீ அவர்களை விருந்துக்கு அழைத்து வருகிறாயா?
ஓ.கே.

ராபின்சன் இடத்திற்கு தியோ சென்றார்.
யார் நீ? எங்கே வந்தாய்?
நான் ராபின்சனைப் பார்க்க வேண்டும்.
WREATHS A SPECIALITY

எதற்காக அவரைப்- -பார்க்க வேண்டும்.
ஒரு விருந்துக்கு அவரை அழைக்க வேண்டும்.
இவனிடம் ஆயுதங்கள் எதுவும் இருக்கிறதா என்று சோதனை போடு.
ஒன்றும் இல்லை.
தியோ ராபின்சனை சந்தித்து, விருந்துக்கு அழைத்தார்.
அந்தோணி என்னையும் என் கூட்டத்தையும் விருந்துக்கு அழைத்தானா? ஆச்சரியமாக இருக்கிறதே!
RESERVED
அந்தோணிக்கு ஏதாவது பரிசு கொண்டுபோக வேண்டுமே!
நல்ல பழங்கள் கொண்டு வாருங்கள்.
ஒருநாள் இரவு டவ்டன் ஓட்டலில் விருந்து நடந்தது.
வாருங்கள், ராபின்சன்.
இந்த விருந்தின் மூலம் நீங்கள் இருவரும் இணைபிரியா நண்பர்களாக இருங்கள்.

பலே
பலே!
கண்டிப்பாக! நீ அதை பார்க்கத்தான் போகிறாய். என் நண்பன் ராபின்சனுக்காக இசை விருந்து ஒன்றும் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

திடீரென்று இசைக் குழுவினர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்து ராபின்சன் கூட்டத்தாரை நோக்கி சுட்டார்கள்!

ராபின்சனை விருந்துக்கு அழைத்து அவனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தான், அந்தோணி.
வசமாக மாட்டிக் கொண்டீர்கள்.
அந்தோணி, உன் புத்தியைக் காட்டிவிட்டாய் அல்லவா?
இதை நான் எதிர்பார்க்கவே இல்லை.
எதிர்பாராத தாக்குதலை சந்தித்த ராபின்சன் குழம்பிப் போனான்.
பழங்களை எடுத்து அவன் மீது வீசுங்கள்!
அப்பொழுதான் அவனுக்குப் புத்தி வரும்.
இருவரையும் சேர்த்து வைத்துவிடலாம் என்று நினைத்தால், இப்படி மோதிக் கொள்கிறார்களே!
பழங்கள் திடீரென்று குண்டுகளாக மாறி வெடித்துச் சிதறின!

அவர்களும் சண்டைக்கு தயாராகத்தான் வந்து இருக்கிறார்கள்.
இதோடு தொலைந்தான் என்று நினைத்தேன்.

ராபின்சன்! இனியாவது என் பாதையில் குறுக்கிடாதே! உன்னை எச்சரிக்கத்தான் விருந்துக்கு அழைத்தேன்.
நானும் உன்னை எச்சரித்துவிட்டுப் போகத்தான் வந்தேன்.
ஆ...ஆ...

பழங்களை அள்ளி வீசிவிட்டு, ராபின்சனும் அவன் கூட்டமும் ஓட்டலில் இருந்து வெளியேறினார்கள்.
இதுதான் சமயம். பேசாமல் அவர்களுடன் சென்றுவிட வேண்டியதுதான்.
அவர்களை சும்மாவிடக் கூடாது!
வாருங்கள் ஒழித்துவிட்டு வருவோம்.
ஆ...ஆ ...ஆ...
முட்டாள்தனமாகப் பேசாதே! முதலில் காரில் ஏறு!
தப்பிக்க நினைத்த தியோவை அந்தோணியின் ஆட்கள் பிடித்துக் கொண்டனர்.
அவர்கள் என்னை இழுத்துப் போக நினைத்தார்கள். நல்லவேளை, நீங்கள் காப்பாற்றினீர்கள்.
எங்களிடம் இருந்து தப்பிக்க நினைத்தால் உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும்.
நாளை இரவுக்குள் அவர்களை எப்படியாவது பழிவாங்க வேண்டும்.

ஓர் அருமையான திட்டம் இருக்கிறது. நாளை இரவு ராபின்சன் ஆட்கள் லாரியில் துப்பாக்கிகளை கடத்திச் செல்ல இருக்கிறார்கள். அப்போது அவர்களை எளிதில் மடக்கிவிடலாம்.
நாளை இரவு நீதான் காரை ஓட்ட வேண்டும்.


அடுத்த நாள் இரவு. சிகாகோ நகருக்கு வெளியே ஒரு லாரி சென்றுகொண்டு இருந்தது.
அதோ ராபின்சனின் லாரி. விரட்டிப் பிடி!

எப்படியாவது இவர்களிடம் இருந்து தப்பிக்க வேண்டுமே.
லாரியை இடித்துத் தள்ளு.


அந்தோணியின் கார் லாரியை விரட்டிக்கொண்டு சென்றது.
சுடுங்கள். சுட்டுத்தள்ளுங்கள்.
என்ன துப்பாக்கி சத்தம்!
யாரோ நம்மைப் பின்தொடர்ந்து வருகிறார்கள்.

காரில் பொருத்தியிருந்த துப்பாக்கியில் இருந்து குண்டுகள் சரமாரியாகப் பொழிந்தன!
லாரியின் குறுக்கே சென்று இடித்துத் தள்ளு.
பம்பருக்கு ஆபத்து வந்துவிடுமே!

லாரியை மடக்கிப் பிடித்தார்கள்.
ராபின்சனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும்.
ஏய், சீக்கிரம் கதவை உடை. உள்ளே என்ன இருக்கிறது என்று பார்.
லாரியின் கதவை திறந்தவர்கள், அப்படியே, மலைத்து நின்றார்கள்!
அந்தோணி நீ சட்டத்தை மீறி செயல்பட்டு வருகிறாய். அதற்கு நீ தண்டனை அனுபவித்துத்தான் தீரவேண்டும்.
ஒன்று நினைத்தால் ஒன்று நடக்கிறதே!
ஆ... போலீசார்
இது உன் வேலைதானா?

போலீசார் கீழே இறங்கி அந்தோணியின் கூட்டத்தைத் தாக்கினார்கள். அவர்களும் பதிலுக்குத் தாக்கினார்கள்.
நீங்கள் அவர்களை பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கும், தியோவுக்கும் சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன.
இப்போது அவனிடம் பம்பரைப் பற்றிக் கேட்கக்கூடாது. பிறகு பார்த்துக் கொள்ளலாம்.
உன் திட்டம் என்ன? இப்போது எங்கே போகிறோம்?
ஒரு வங்கியில் கொள்ளையடிக்கப் போகிறோம். கொள்ளையை நடத்தப் போவது நீதான்.
என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறார்கள்.


ஒரு காட்டில் காரை நிறுத்தி, இறங்கினார்கள்.
டிரான்சிஸ்டர் ரேடியோ காரிலேயே இருக்கட்டும். எதற்காவது உதவும்.

தியோ வைத்துவிட்டு வந்த டிரான்சிஸ்டரில் இருந்து ஒலி வந்தது.
உஷ்... உஷ்...
அது என்ன சத்தம்?
சத்தத்தைப் பார்த்தால் வயர்லெஸ் கருவி போல தெரிகிறதே.

அந்தோணி காருக்கு வந்து பார்த்தான்.
உங்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருக்கிறது.
ஏய் இங்கே வந்து பார். இது வயர்லெஸ் இல்லை. வேறு ஏதோ ஒன்று.
ஏய்... அதைத் தொடாதே! நான் வந்து பார்க்கிறேன்.

இதுதான் சமயம் என்று தியோ, அந்தோணியைக் கீழே தள்ளிவிட்டு காரை எடுத்துக் கிளம்பினார்.
எனக்குத் தேவை பம்பர். இனிமேல் சுலபமாக எடுத்துவிடுவேன்.
ஏய்... எங்கே போகிறாய்?

சிகாகோ நகரின் ஒரு தெருவில் நிறுத்தியிருந்த சூப்பர் காருக்கு அருகில் அந்த காரை நிறுத்தி பம்பரைக் கழற்றினார்.
சூப்பர் காரில் திரும்பிச் சென்று சர்ச்சிலிடம் பம்பரை ஒப்படைத்து விடுவேன்.
ஏய்... நடுரோட்டில் என்ன செய்கிறாய்?
இந்த இடத்தில் காரை நிறுத்தக் கூடாது என்று உனக்குத் தெரியாதா?
ஒரு கொள்ளைக் கூட்டம் என்னை விரட்டி வருகிறது.
நடுரோட்டில் காரை நிறுத்தின குற்றத்திற்காக தியோவைக் கைது செய்து போலீஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்தார்கள்.
இவன்தான் அந்தோணியையும் அவன் கூட்டத்தையும் காரில் கூட்டிச் சென்றான்.
போலீசார் தியோவிடம் விசாரணை நடத்தினார்கள்.
என்ன நடந்தது? விவரமாகச் சொல்லுங்கள்.
அந்தோணியைப் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால். அவர்கள் பத்தாவது தெருவில் உள்ள பாங்கில் கொள்ளையடிக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

உடனே போலீசார் அதிவேகமாக செயல்பட்டார்கள்.
ஜீப்பை எடு. பத்தாவது தெருவுக்குப் போ!
அவர்களை எப்படியும் கூண்டோடு பிடித்து விட வேண்டும்.

போலீஸ் ஜீப் 10-வது தெருவில் நுழைந்த அதே நேரம் அந்தோணியும் அவன் கூட்டத்தினரும் பாங்கியில் கொள்ளையடித்துக் கொண்டு பணத்துடன வெளியே வந்தார்கள்.
அதோ! அந்தோணி ஆட்கள்!
ஏய்... போலீஸ் வருகிறது. சீக்கிரம் ஓடிவாருங்கள்!

அசையாதீர்கள்! சுட்டுவிடுவேன்!!
சீக்கிரம் . விரைவாகப் போ...
அடப்பாவிகளா! தப்பிக்கவா பார்க்கிறீர்கள் உங்களை விட மாட்டேன்!
தியோ விரைந்து சென்று அந்தோணியின் காரின் பின்னால் தொற்றிக் கொண்டார்.
கெட்டியாக பிடித்துக்கொள்ள வேண்டும். இல்லை.. சாக வேண்டியதுதான்.


கார் புயல் வேகத்தில் சீறிப் பாய்ந்தது.
மிசிகன் ஏரிக்கரைக்குக் காரை விடு.
அது எங்கே இருக்கிறது?
போலீசாரும், பாங்கியில் உள்ளவர்களும் திகைத்து நின்றார்கள்.

சிகாகோ நகரில் இருந்து 20 மைல் சென்றுவிட்டார்கள். அப்போது ராபின்சன் குறுக்கிட்டான்.
அதோ அந்தோணியின் கார் வருகிறது. ரோட்டை மறியுங்கள்.
டேய், ராபின்சன் ஆட்கள் காரை மறிக்கிறார்கள். பாங்கில் கொள்ளையடித்த பணம் வேறு இருக்கிறதே. பணத்தைக் காருக்குள் மறைத்து வை.

அந்தோணியின் கார் வந்த வேகத்தில் ராபின்சனின் கார் மீது பயங்கரமாக மோதியது. அந்தோணியின் கார் பம்பர் கழன்று காற்றில் பறந்தது. அதே வேகத்தில் தியோவும் கீழே விழுந்தார்.
டமார்!
நல்லவேளை, என்னை யாரும் கவனிக்கவில்லை.
வானில் பறந்த பம்பர் ராபின்சன் ஆட்களின் அருகில் போய் விழுந்தது.
எல்லாரும் மரியாதையா துப்பாக்கியைக் கீழே போடுங்கள்.
ஆ ஆ
ராபின்சன் ஆட்கள் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு அந்தோணியிடம் சரண் அடைந்தார்கள்.

இதோடு நீ தீர்ந்தாய்! உன்னை உயிரோடு விட்டால்தானே நீ என் வழியில் குறுக்கிடுவாய்?
இவனை இந்த பம்பரில் கட்டி, அந்த ஏரிக்குள் தூக்கி எறிந்துவிடுவோம்.
இரண்டு கொள்ளைக்காரர்கள் ராபின்சனை அந்த பம்பரில் வைத்துக் கட்டினார்கள்.
இறுக்கமாகக் கட்டுங்கள். இல்லை, இவன் தப்பி விடுவான்.
சர்ச்சில் பம்பரை காணவில்லை என்று சொன்னார்.
அது வேறு எங்கும் இல்லை. ராபின்சனை பம்பருடன் சேர்த்துக் கட்டி மிசிகன் ஏரிக்குள் போட்டு இருக்கிறார்கள்.
இப்பொழுது நான் இந்த பம்பரை எடுத்துக்கொண்டு சிகாகோ நகருக்குப் போக வேண்டும். இதன் இரகசியம் தெரிந்துவிடும்.
ராபின்சனை பம்பரில் கட்டி ஏரிக்குள் போடத் தூக்கிச் சென்றார்கள்.

தியோ எந்திர துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கி சுட்டார். அந்தோணியின் ஆட்கள் ராபின்சனை கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.
தியோ, வந்து விட்டான். இனிமேல் நமக்கு ஆபத்துதான். ஓடு! ஓடு!!
அந்தோணியும் அவன் கூட்டத்தினரும் தலைதெறிக்க ஓடி மறைந்தார்கள்.
தியோ என் உயிரைக் காப்பாற்றிவிட்டீர்கள். உங்களுக்கு நான் எப்படிக் கைமாறு செய்யப் போகிறேன் என்று தெரிய வில்லை.
நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நான் இப்போது உடனடியாக இந்த பம்பருடன் சிகாகோ நகருக்குப் போக வேண்டும்.
தியோ ராபின்சனின் காரில் சிகாகோ நகருக்கு விரைந்தார்.
இந்த இழிந்த வாழ்க்கைக்கு நான் முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன். இனிமேல் புதிய வாழ்க்கையைத் தொடங்கப் போகிறேன்.
ரொம்ப மகிழ்ச்சி. உங்களைப் போல் எல்லாரும் மாறினால் நன்றாக இருக்கும்.

சிகாகோ நகரை அடைந்த தியோ, பம்பருடன் தனது சூப்பர் காரில் ஏறி அமர்ந்தார்.
எங்கே போகப் போகிறீர்கள் தியோ?
என் நண்பனை சந்திக்கப் போகிறேன்!


தியோ ராபின்சனிடம் விடைபெற்றார். 1988-ம் ஆண்டுக்கு முன்னோக்கி விரைந்தார்.

1988 கார் மியூசியத்தில் பேராசிரியர் புருவும், சர்ச்சிலும் தியோவுக்காகக் காத்துக்கொண்டு இருந்தார்கள்.
சர்ச்சில், அதோ தியோ...! பம்பருடன் வருகிறான்.
ஆமாம், வெற்றி நமக்குத்தான்.

காணாமல் போன பம்பர் கிடைத்த மகிழ்ச்சியில் சர்ச்சில் பேராசிரியர் புருவையும், தியோவையும் பாராட்டினார்.
தியோ! பம்பர் எங்கே இருந்தது?
பம்பர் எனக்கு கிடைக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. அந்தோணி, இந்த பம்பரில் அவனுடைய எதிரி ராபின்சனைக் கட்டி மிசிகன் ஏரியில் போட்டு இருக்கிறான்.

பம்பரைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஒருவன் வந்தான்.
ஏய்! மரியாதையா அந்த பம்பரை என்னிடம் கொடு. அது எனக்குத்தான் சொந்தம். நான் அந்தோணியின் வாரிசு!

அந்தோணியின் வாரிசு என்று சொல்லிக்கொண்டவன் திடீர் என்று தியோவை நோக்கித் துப்பாக்கியை நீட்டினான்.
தொல்லைகள் ஓய்ந்தன என்று நினைத்தேன். புதிதாக ஒரு காளான் முளைத்து நான்தான் அந்தோணியின் வாரிசு என்கிறதே! உனக்கு பம்பர்தானே வேண்டும்? இந்தா எடுத்துக்கொள்

வந்தவன், காரில் ஏறித் தப்பினான். அவனைப் பிடிக்கத் தியோ, பேராசிரியர் புரு, சர்ச்சில் மூவரும் காரில் ஏறிப் பின்தொடர்ந்தார்கள்.
தியோ, என்னைப் பற்றி உனக்குத் தெரியாது. நான் யார் என்று உனக்குக் காட்டுகிறேன் பார்.
சீக்கிரம் ஏறுங்கள்! அவனைப் பிடிக்க வேண்டும்.
தியோ, பார்த்து ஓட்டு.
ஏன் பயப்படுகிறீர்கள். சிகாகோவில் நான் கார் ஓட்டியதைப் பார்த்து வியந்த அந்தோணி, எப்பொழுதும் என்னைத்தான் கார் ஓட்டச் சொல்லுவான்.
சிறிதுநேரத்தில் இரண்டு கார்களும் ஒன்றொடு ஒன்று பயங்கரமாக மோதிக் கொண்டன.
அந்தோணி பல இலட்சம் டாலர்களை மறைத்து வைத்துள்ள இடத்தை அறிய, இவன் பம்பரைத் திருட வந்திருக்கிறான்.
கார் மோதியதில், காரின் பின்புறம் இருந்து ஒரு தோல் பையில் இருந்து டாலர்கள் கொட்டின. அந்தப் பணம் 1925-ல் அந்தோணி பாங்கில் கொள்ளையடித்துவிட்டு வரும்போது ராபின்சன் அபகரித்துவிடக் கூடாது என்பதற்காகக் காரில் மறைத்து வைத்தது.

அதற்குள் தியோ அவனை மடக்கிப் பிடித்தார்.
இந்த டாலர் 1925-ல் உள்ளது. இதை அந்தோணிதான் மறைத்து வைத்திருக்க வேண்டும். இரகசியம் பம்பரில் இல்லை. காரில் இருந்திருக்கிறது!
தியோ, உன் திறமையைப் பாராட்டுகிறேன். இவனையும், அந்தோணி மறைத்து வைத்திருந்த டாலர்களையும் போலீசில் ஒப்படைத்து விடுவோம்.
பேராசிரியர் புருவும், தியோவும், சர்ச்சிலிடம் சொல்லிக்கொண்டு, காரில் ஏறிக்கிளம்பினார்கள்.
தியோ! சூப்பர் கார் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது, பார்!
அந்தப் பெருமை இந்தக் காரைச் செய்த உங்களுக்குத்தான்!
(முடிந்தது)

Fans made not for sale

<u>முன்கதை:—</u>

இன்ஸ்பெக்டர் ஆசாத்தை, தொழில் அதிபர் நாராயணனுக்கு பாதுகாப்பாக போலீஸ் கமிஷனர் அனுப்பினார். வில்சன் என்பவன், நாராயணனின் அறையில் இருந்து முக்கிய டாக்குமெண்டுகளை திருடிக்கொண்டு போய் துறைமுகத்தில், நாராயணனுக்கு வந்த மர்ம பார்சலை டெலிவரி எடுத்துக் கொண்டான். நாராயணனின் செயலாளர் சசிகலாவையும் தீர்த்துக்கட்ட முயன்றான்.

சசிகலா அதிர்ந்தாள்
சத்தம் போடாமல் கீழே இறங்குடி
என்ன சொல்லு கிறீர்கள்?
என்ன, பேச்சு ஒரு மாதிரி இருக்கிறது!
உள்ளே போக என்னிடம் சாவி இல்லையே!
கவலைப்படாதே என்னிடம் இருக்கிறது!!
அப்பொழுது நாராயணனின் அலுவலகத்தில் இன்ஸ்பெக்டர் ஆசாத் இருந்தார்.
சசிகலா இங்கேதானே அமர்ந்து இருப்பாள்?

இரகசியமாக டேப்ரிக்கார்டர் எதுவும் இங்கே வைத்திருப் - பாளோ?
எங்கே பதுக்கி வைத்திருப்பாள்?
இந்த நடராசர் சிலை புதிதாக இருக்கிறது.
சிலையைப் பற்றி ஒரு விவரமும் இல்லையே!
ஆ! டேப்!
ஆசாத் சிலையை சோதித்தார். படிக்கட்டில் ஆட்கள் வரும் சத்தம் கேட்டது.
யாரோ வருகிறார்கள். எடுக்க இடத்தில் இதை வைத்து விடுவோம்.

ஆசாத் மறைந்து கொண்டார்.
இந்நேரம் இங்கே யார் வருகிறார்?
ஓ! சசிகலா! நாராயணனின் செயலாளர்.
அவருடன் வந்திருப்பது யார்? எங்கே வந்தார்கள்?
சசிகலா, நான் கொடுத்த நடராசர் சிலை எங்கே?
அங்கே இருக்கிறது.
இதை நான் எடுத்துப் போகிறேன் இதன் வேலை முடிந்தது

வில்சன்! தேசா ஸ்யப் பார்த்–தீர்களா?
ரொம்பநாளாப் பார்க்க முடிய வில்லை.
நான் இருக்கும்பொழுது வீணாகத் தேசாயை ஏன் தேடுகிறாய்?
சசி! நீ அழகி மட்டுமல்ல; புத்தி சாலியும் கூட. உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்–கிறது!
என்னை விடு! இல்லாவிட்டால் கூச்சல் போடுவேன்!
ஆசாத் வெளியே வந்தார்.
விடு, அவளை!
வில்சன் வேகமாக சசிகலாவைத் திருப்பினான்!

சுடு, பார்ப்போம்!
இன்ஸ்பெக்டர்! துப்பாக்கியைக் கீழே போடுங்கள்!!
ஆசாத் துப்பாக்கியைக் கீழே போட்டார்.
முதலில் உன் கதையை முடிக்கிறேன்!
அந்தப் பெண்ணை விட்டுவிடு!
என்னை அறிந்தவள் அவள்தான். அவளையும் தீர்த்துக்கட்டியே தீரவேண்டும்.

வில்சன்! உன்னைப் பற்றிய எல்லா விவரமும் ஏற்கனவே எங்கள் கோப்புக்கு வந்துவிட்டன!
மேசை மீது இருந்த மணியை அழுத்த சசிகலா முயற்சித்தாள்.
அதேநேரம் ஆசாத் ஓர் உதை கொடுத்தார்!
படார்!
வில்சன் கையில் இருந்த துப்பாக்கி பறந்தது! வில்சனும் தாக்கினான்.
கும்!

ஆசாத் சிங்கமாகத் திருப்பிக் கொடுத்தார்!
கும்...
ஆ!
வில்சன் ஒரு நாற்காலியைத் தூக்கினான்.
சசிகலா! ஒதுங்கிப் போ!!
நீங்கள் ஒதுங்குங்கள்!
சட் என்று சசிகலா துப்பாக்கியை எடுத்தாள்.
நாற்காலியைக் கீழே போடு!
சுட்டு விடுவேன்!
வில்சன் கைது செய்யப்பட்டு அழைத்து வரப்பட்டான்.
சார்! இவன் வெறும் கூலி ஆள்தான். வில்சன்தான் உண்மையான குற்றவாளி.
என்ன சொல்லு கிறீர்கள், ஆசாத்?

போலி வில்சன் வாக்குமூலம் கொடுத்தான்.
பார்சலை இரகசியமாக வெளியில் எடுக்க வில்சன்தான் என்னை ஆங்காங்கில் இருந்து அழைத்து வந்தார். அந்த பார்சலில் வெடி குண்டுகள் இருக்கின்றன.
தீவிரவாதிகளுக்கு அந்தக் குண்டுகளை விற்பனை செய்வோம்.
நாராயணனுக்கு இது தெரியுமா?
நாராயணனுக்கு இது தெரியாது. தேசாய்தான் இங்கே எங்கள் ஏஜண்டு.
தேசாயைக் கைது செய்ய வேண்டும்!

தேசாய், சசிகலா, வில்சன் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விட்டார்கள்.
மிஸ்டர் நாராயணனை என்ன செய்வது?
அவருக்கு சிறிது சந்தேகம் ஏற்பட்டுதான் எனக்குத் தகவல் கொடுத்து இருக்கிறார் என்று நினைக்கிறேன்.
அதனால்தானே இந்த சதிக்கூட்டத்தை பிடிக்க முடிந்தது!
(முடிந்தது

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

விற்பனை ஆகிறது!

ராணி முத்து காலண்டர்-1989



★ வீட்டுக்கு அழகு தரும் முருகன் படம்.

★ கொஞ்சமும் தவறு இல்லாத பஞ்சாங்கக் குறிப்புகள்.

★ நாள்தோறும் நல்ல நேரம் குறிக்கப்பட்டு உள்ளது.

இப்பொழுது பரபரப்பாக விற்பனையாகிறது.

உங்கள் காலண்டருக்கு முந்துங்கள்.

ராணி பிரிண்டர்ஸ், சென்னை-600 007.